


**05.10. 2024**

**தலைப்புச் செய்திகள்**

1. **விவசாயிகளுக்கான வேளாண் நிதியுதவி திட்டத்தின்** 18-வது தவணை தொகையான, 20 ஆயிரம் கோடி ரூபாயை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று விடுவித்தார்.

2. **ஹரியானாவில் 90 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான** வாக்குப்பதிவில் பகல் 1 மணி நிலவரப்படி **36.69** சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன.

3. **அந்நிய செலாவணி பரிவர்த்தனை கையிருப்பில் அமெரிக்காவை** பின்தள்ளி, உலகின் 4-வது பொருளாதார நாடாக இந்தியா முன்னேறியுள்ளது.

4. **தமிழகத்தில் பருவமழைக்காலத்தில் அத்தியாவசிய பொருட்கள்** மக்களுக்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யுமாறு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

**5. நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் இன்று** கன மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

**பிரதமர்**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி மஹாராஷ்டிர மாநிலம்** வாஷிமில், பிரதமரின் கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ் 18-வது தவணை தொகையான, 20 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை, 9 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்குகளில் இன்று விடுவித்தார்.

மஹாராஷ்டிரா மாநிலத்தின் வேளாண் கட்டமைப்பு நிதியத்தின் கீழ் ஆயிரத்து 920 கோடி ரூபாய் மதிப்பிலான, 7 ஆயிரத்து 500 திட்டங்களையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

ஆயிரத்து 300 கோடி ரூபாய் வருவாய்க்கு வகை செய்யும், 9 ஆயிரத்து 200 விவசாய உற்பத்தி அமைப்புகளையும் அவர் துவக்கி வைத்தார்.

கால்நடைகளுக்கான ஒருங்கிணைந்த அதிநவீன விந்து திட்டத்தையும் பிரதமர் துவக்கி வைத்தார்.

முன்னதாக வாஷிமில் பஞ்சாரா பாரம்பரிய அருங்காட்சியகத்தை இன்று திறந்து வைத்த பிரதமர் அதனை முழுமையாக பார்வையிட்டார்.

□□□□□□□□

**ஹரியானா தேர்தல்**

**ஹரியானாவில் 90 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு** ஒரேகட்டமாக இன்று நடைபெறும் வாக்குப்பதிவில் பகல் 1 மணி நிலவரப்படி 36.69 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

2 கோடியே 3 லட்சம் வாக்காளர்கள், ஆயிரத்து 31 வேட்பாளர்களின் வெற்றியை நிர்ணயிக்க உள்ளனர்.

இதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள 20 ஆயிரத்து 632 வாக்குச் சாவடிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

வாக்காளர்கள் அதிகளவில் வாக்களித்து ஜனநாயகத்தை நிலைநாட்ட பிரதமர் திரு. நரேந்திரமோடி அழைப்பு விடுத்துள்ளார்.

முதல்முறை வாக்காளர்களுக்கு தமது நல்வாழ்த்துக்களை பிரதமர் உரித்தாக்கி உள்ளார்.

ஜம்மு காஷ்மீர் தேர்தலில் பதிவான வாக்குகளும், ஹரியானாவில் இன்று பதிவாகும் வாக்குகளும் வரும் 8 ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

□□□□□□□□

**எஸ்.ஜெய்சங்கர்**

இஸ்லாமாபாத்தில் வரும் 15, 16-ம் தேதிகளில் தொடங்கவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாட்டில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

மத்திய வெளியுறவுத்துறை செயலர் திரு. ரந்தீப் ஜெய்ஸ்வால் புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்துள்ளார்.

□□□□□□□□

**அந்நிய செலாவணி**

அந்நிய செலாவணி பரிவர்த்தனை கையிருப்பில் அமெரிக்காவை பின்தள்ளி, உலகின் 4-வது பொருளாதார நாடாக இந்தியா முன்னேறியுள்ளது.

கடந்த 27-ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், நம் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 12.588 பில்லியன் டாலர்கள் உயர்ந்து இதுவரை இல்லாத உச்ச அளவான 704.885 பில்லியன் டாலர் அளவை எட்டியது.

இதனையடுத்து அந்நிய செலாவணி பரிவர்த்தனை பட்டியலில் சீனா, ஜப்பான், ஸ்விட்சர்லாந்து நாடுகளுக்கு அடுத்தபடியாக 4-வது இடத்தை இந்தியா கைப்பறியுள்ளது.

சர்வதேச பொருளாதார தேக்க நிலையிலும், இந்தியாவின் இந்நிலை அதன் பொருளாதார வளத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

□□□□□□□□

**மத்திய நிதியமைச்சகம்**

**பிரதமரின் தொழில்பயிற்சி திட்டத்தின்கீழ்** முன்னணி நிறுவனங்களில் பயிற்சிபெற வரும் 12-ம் தேதி முதல் 25-ம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.

இதன்படி 21 வயதுமுதல் 24 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு, மாதம் 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவியுடன் 500 முன்னணி நிறுவனங்களில் திறன் பயிற்சி வழங்கப்படவுள்ளன.

800 கோடி ரூபாய் மதிப்பில் 5 ஆண்டுகளில் ஒருகோடி இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

□□□□□□□□□

**உதயநிதி**

**தமிழகத்தில் பருவமழைக்காலத்தில் அத்தியாவசிய** பொருட்கள் மக்களுக்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யுமாறு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகள் குறித்து சென்னை தலைமை செயலகத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடிக்குமாறும் அலுவலர்களை அறிவுறுத்தியுள்ளார்.

□□□□□□□□□

**கே.ஆர். பெரியகருப்பன்**

**தமிழகத்தில் கிராமப்புற மாணவர்களும் பொறியியல்** மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்வி பெற கல்விக்கடன் முகாம்கள் வகை செய்வதாக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. மு.சு. பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில் தனியார்த்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை போட்டித்தேர்விற்கான இலவச பயிற்சி, அயல்நாட்டு

வேலைவாய்ப்பு வழிகாட்டுதல்கள், திறன் மேம்பாட்டு பயிற்சி உள்ளிட்ட அரசின் பல்வேறு நலத்திட்டங்களை எடுத்துரைத்தார்.

மாணவர்கள் இவ்வாய்ப்புகளை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

□□□□□□□□□

**கிசான் சம்மான்**

பிரதமரின் கிசான் சம்மான் நிதி உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாக திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி தெரிவிக்கையில்,

**.. வாய்ஸ் ..**

□□□□□□□□□

**தேசிய வனவிலங்கு வாரம்**

**தேசிய வனவிலங்கு வாரத்தை ஒட்டி திருச்சி** ஸ்ரீரங்கம் வண்ணத்துப்பூச்சி பூங்காவில் இன்றுமுதல் 3 நாட்களுக்கு கட்டணமின்றி பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாக மாவட்ட வனத்துறை அலுவலர் எஸ். கிருத்திகா தெரிவித்துள்ளார்

**.. வாய்ஸ் ..**

**நீலகிரி** மாவட்டத்தில் “**மனித விலங்கு** மோதல்களை தவிர்க்கும் வகையிலான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

**நாமக்கல்லில் வன உயிரின வார விழா போட்டிகள்** நடத்தப்படுவதால் மாணவ மாணவிகளிடையே வனம் சுற்றுசூழல்

குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முடிவதாக மாவட்ட வன அலுவலர் திரு. கலாநிதி தெரிவித்துள்ளார்.

□□□□□□□□□

**தென்காசி – வாய்ஸ்**

தென்காசி மாவட்டம் வடகரையில் விளை நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்திய காட்டு யானைகள் வனப்பகுதிக்குள் திருப்பி விடப்பட்டதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

□□□□□□□□□

**இருவரி**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரதமரின் வேலை வாய்ப்பு** உருவாக்க திட்டத்தை இளைஞர்கள், சிறு குறு நடுத்தர தொழில்முனைவோர் முறையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. அருணா வலியுறுத்தியுள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தில் மகளிர் சுயஉதவி குழுவினர்** சிறப்பாக செயல்பட வேண்டுமென ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் அறிவுறுத்தியுள்ளார்.

**திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் சிறப்பு ஆதார் முகாம்** இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்திய அரசால்** அங்கீகரிக்கப்பட்ட 10 ரூபாய் நாணயங்களை வாங்க மறுக்கும் கடை உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்

என ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் ஊராட்சி** ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில நடைபெறும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அழகுமீனா இன்று ஆய்வுசெய்தார்.

□□□□□□□□

**வானிலை**

நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கன மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தேனி, திண்டுக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், நாமக்கல், கரூர், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

மன்னார்வளைகுடா, குமரிக்கடல், வங்ககடல், அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் இதற்குட்பட்ட பகுதிகளுக்கு வரும் 9-ம் தேதிவரை மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

□□□□□□□□

**ரயில்**

**பயணிகளின் வசதிக்காக திருச்சி - தாம்பரம் இடையே வரும்** 11-ம் தேதிமுதல் டிசம்பர் 31-ம் தேதிவரை செவ்வாய், வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அதிவிரைவு சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதன்படி திருச்சியிலிருந்து காலை மணி 5.35க்கு புறப்படும் இந்த ரயில் நண்பகல் 12.30 மணிக்கு தாம்பரம் சென்றடையும்

மறுமார்க்கத்தில் தாம்பரத்திலிருந்து பிற்பகல் மணி 3.30-க்கு புறப்படும் இந்த ரயில் இரவு 11.35-க்கு திருச்சி வந்தடையும்.

□□□□□□□□

**கிரிக்கெட்**

**துபாயில் நடைபெறும் மகளிர் 20-20 உலக கோப்பை** கிரிக்கெட் போட்டியில் இன்று பங்களாதேஷ் - இங்கிலாந்தையும்,

ஆஸ்திரேலியா - இலங்கையையும் எதிர்கொள்கின்றன.

□□□□□□□□

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**